# ஆகஸ்ட்– 02 – வியாழன்

## புனித வெர்செலி யுசேபியுஸ்

## அல்லேலூயா! என் நெஞ்சே! நீ ஆண்டவரைப் போற்றிடு: திபா. 146:1

## முதல் வாசகம் ஏரேமியா: 18 : 1 - 6

எரேமியாவுக்கு ஆண்டவர் அருளிய வாக்கு : ”நீ எழுந்து குயவன் வீட்டுக்குப் போ. அங்கு என் சொற்களை நீ கேட்கச் செய்வேன்.” எனவே நான் குயவர் வீட்டுக்குப் போனேன். அங்கு அவர் சுழல்வட்டைக் கொண்டு வேலை செய்து கொண்டிருந்தார். குயவர் தம் கையால் செய்த மண் கலம் சரியாக அமையாத போதெல்லாம், அவர் அதைத் தம் விருப்பப்படி வேறொரு கலமாக வடித்துக் கொண்டிருந்தார். அப்போது ஆண்டவர் எனக்கு அருளிய வாக் : ”இஸ்ரயேல் வீட்டாரே, இந்தக் குயவன் செய்வதுபோல் நானும் உனக்குச் செய்யமுடியாதா? என்கிறார் ஆண்டவர். இந்தக் குயவன் கையிலுள்ள களிமண்ணைப்போல இஸ்ரயேல் வீட்டாரே, நீங்கள் என் கையில் இருக்கின்றீர்கள்.

**பதில்பாடல்:** இறைவனைத் தம் துணையாகக் கொண்டிருப்போர் பேறு பெற்றோர்.

## நற்செய்தி : மத்தேயு 13: 47 - 53

அக்காலத்தில் இயேசு மக்களை நோக்கிக் கூறியதாவது : ”விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லாவகையான மீன்களையும் வாரிக்கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும். வலைநிறைந்ததும் அதை இழுத்துக்கொண்டு போய்க்கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்துவைப்பர் கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலகமுடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையேயிருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.”. ”இவற்றையெல்லாம் புரிந்து கொண்டீர்களா?” என்று இயேசு கேட்க, அவர்கள், ”ஆம்” என்றார்கள். பின்பு அவர், ”ஆகையால் விண்ணரசு பற்றிக் கற்றுக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத் திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப்போல் இருக்கின்றனர்” என்று அவர்களிடம் கூறினார். இவ்வுவமைகளை இயேசு சொல்லிமுடித்த பின்பு அவ்விடத்தை விட்டுச்சென்றார்.

**தியானம்:** உவமைகளில் இயேசு விண்ணரசைப் பற்றியும் அதன் தன்மைகளைப்பற்றியும் நமக்கு சுட்டிக்காட்டினாலும் ஆங்காங்கே கடவுளின் இயல்பைப்பற்றிய பார்வையையும் நமக்கு வழங்கியுள்ளார். இன்றைய நற்செய்தியில் இயேசு கடவுளை ஒரு நீதிபதியாக , அதாவது நல்லவர்களுக்கு முடிவில்லா வாழ்வையும் தீயவர்களுக்கு தண்டணையும் தருபவராக காட்டுகின்றார். பழைய ஏற்பாட்டை உற்று நோக்கும்போது இஸ்ரவேல் மக்கள் கடவுளை ஒரு நீதிபதியாக சட்டங்களையும் கட்டளைகளையும் தருபவராகப் பார்த்தனர். இந்தப்பார்வை தான் சட்டங்களை இம்மி பிசகாமல் சடங்காச்சாரமாக கடைபிடிக்கின்ற நிலைக்கு மக்களை இட்டுச்சென்றது. இப்படிப்பட்ட அர்த்தமற்ற சடங்காச்சரமான சட்டங்களை மட்டுமல்ல, கடவுளை நீதிபதியாகப் பார்க்கின்ற பார்வையையும் உடைத்தெரிந்து, கடவுளை இரக்கமுள்ளவராக காண்பித்தவர் இயேசு. அப்படிப்பட்ட இயேசுவே கடவுளை ஒருநீதிபதியாக நமக்கு காண்பிக்கலாமா என்ற கேள்வி எழும்புகிறது. இங்கு இயேசு கடவுளை ஒரு நீதிபதியாக காட்டுவதன் நோக்கம் நாம் அவரைப்பபார்த்து பயப்படவேண்டும் என்பதற்காக அல்ல மாறாக மாறாக நம் வாழ்வின் தீமைகளைக் குறைத்து நன்மைகளைப் பெருக்கி நமக்கும் பிறருக்கும் கடவுளுக்கும் ஏற்றவர்களாக நாம் மாற வேண்டும் என்பதற்காகவே, இதற்கு மாறாக கடவுள் கொடுத்த சுதந்திரத்தை சரியாக பயன்படுத்தாமல் தீமையில் உழன்றோம் என்றால் இறுதியில் இறைவன் நம்மைத்தண்டிப்பார் என்பதை விட நம்மை நாமே தண்டித்துக் கொள்கின்றோம் என்று சொல்வதே சரியானதாக இருக்கும். நாம் அனைவரும் இறைவன் நமக்கு கொடுத்த சுதந்திரத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துகின்றோமா என்பதை சிந்தித்துப்பார்ப்போம்.